உ

ஓம் குஹாய நம :

திருப்புகழமிர்தம்

" குருப்புகழை மேவுகின்ற கொற்றவன் றாள்போற்றுந்
திருப்புகழைக் கேளீர் தினம்."

மலர் 5. Vol 5. விக்கிரம ஹூ ஐப்பசி மீ 1உ அக்டோபர்-1940 இதழ் 7. No 7.

திருப்புகழ்

திருவேரகம் (சுவாமிமலை)

வாதமோடு சூலைகண்ட மாலைகுலை நோவு சந்து
மாவலிவி யாதிகுன்ம மோடுகாசம்
வாயுவுட னேபரந்த தாமரைகள் பீனசம்பின்
மாதர்தரு பூஷணங்கள் எனவாகும்
பாதகவி யாதிபுண்கள் ஆனதுட னேதொடர்ந்து
பாயலைவி டாதுமங்க இவையால்நின்
பாதமல ரானதின்க ணேயமற வேமறந்து
பாவமது பானமுண்டு வெறிமூடி
ஏதமுறு பாசபந்த மானவலை யோடுழன்று
ஈனமிகு சாதியின்க ணதிலேயான்
ஈடழித லானதின்பின் மூடனென வோதுமுன்புன்
ஈரஅருள் கூரவந்து எனையாள்வாய்
சூதமகிழ் பாலைவன்னி தாதுவளர் சோலைதுன்றி
சூழமதில் தாவிமஞ்சி னளவாகத்

தோரணநன் மாடமெங்கு நீடுகொடி யேதழைந்த
சுவாமிமலை வாழவந்த பெருமாளே.

பதவுரை:

சூதம் - மாமரம், மகிழ் - மகிழமரம், பாலை - பாலைமரம், கொன்றை - கொன்றைமரமும், தாது - தாதுமாதுளை முதலிய மரங்கள், வளர்சோலை துன்றி - வளம்பெற வளர்ந்துள்ள சோலைகள் நெருங்கி, சூழும் மதில் தாவி - சூழ்ந்திருக்கின்ற திருமதில்கள் விண்ணுலகைத் தாவி, மஞ்சின் அளவு ஆக - மேகமண்டலம்வரை ஓங்கி விளங்க, தோரண நன் மாடம் எங்கும் - மகர தோரணங்கள் இலகும் அழகிய உப்பரிகைகளின்மீது எவ்விடத்தும், நீடு கொடியே தழைந்த - உயர்ந்த கொடிகள் (நல்விழாப்பொலிவை விளக்கி) பறந்துகொண்டு மங்கலமாகவுள்ள, சுவாமிமலை வாழ வந்த - சுவாமிமலையென்னும் திருத்தலஞ் சிறக்குமாறு எழுந்தருளியுள்ள, பெருமாளே - பெருமையின் மிக்கவரே! வாதமொடு சூலை - அண்டவாதம் பட்சவாதம் முதலிய வாத ரோகங்கள் சூலைநோய், கண்டமாலை - கண்டமாலை, குலைநோவு - குலையெரிச்சல், சந்து மாவலி வியாதி - கீல் சந்துகளில் வரும் பெரியதுன்பத்தைத் தரும் நோய்கள், குன்மமொடுகாசம், குன்மம் சுவாசகாசம் - வாயுவுடனே - வாயுரோகங்களோடு, படர்ந்த தாமரைகள் - தோலின்மேல் படரும் படர் தாமரை முதலிய படைநோய்கள், பீனசம் - மூக்குநோய்கள், பின் - பின்னுமுள்ள நோய்களும், மாதர்தரு பூஷணங்கள் என ஆகும் - (விலை)மாதர்கள் தருகின்ற ஆபரணங்களாகும், (இந்நோய்களுடன்) பாதக வியாதி - பாவ மிகுதியால் வரும் தொழுநோய், புண்கள் ஆனது உடனே தொடர்ந்து - புண்கள் முதலிய தொந்தரையுடன் அடியேனைப் பற்றிவர, பாயலை விடாது மங்க - பாயல்மீது இடைவிடாது மங்கிக் கிடக்க, இவையால் - இத்தகைய துன்பங்களால், நின் பாதமலர் ஆனதின்கண் - தேவரீருடைய திருவடித்தாமரையின் மீது, நேயம் அறவே மறந்து - அன்பு செலுத்தும் பக்திநெறியை அடியோடு மறந்து, பாவ மது பானம் உண்டு - தீவினைகளாகிய-கள்ளைக்-குடித்து, வெறி மூடி - அறிவு மயங்கப் பட்டு, ஏதம் உறு - குற்றம் பொருந்திய, பாச பந்தம் ஆன வலையோடு உழன்று - உலகப்பற்று உயிர்ப்பற்றுமுதலிய ஆசைவலையிற் சிக்கிச் சுழன்று, ஈனமிகு சாதியின்கண் அதிலே யான் - இழிவுடைய விலைமகளிர் கூட்டத்திலே அடியேன் கலந்து, ஈடு அழிதலானதின்பின் - பெருமை குறைந்த பிறகு, மூடன் என ஓது முன்பு - உலக மக்கள் அடியேனை அறிவில்லாதவன் என்று இழித்துரையாடா முன்னர், ஈர அருள் கூர வந்து - தேவரீர் தண்ணருள் சுரந்துவந்து, எனை ஆள்வாய் - அடியேனை ஆண்டருள்வீர்.

பொழிப்புரை:

மா, மகிழ், பாலை, கொன்றை, தாது மாதுளை முதலிய பூமரங்கள் வளம்பெற வளர்ந்துள்ள சோலைகள் நெருங்கி, சூழ்ந்திருக்கின்ற திருமதில்கள் விண்ணுலகம்வரை தாவி மேகமண்டலத்தை அளாவி விளங்க, தோரணங்களால் அலங்கரித்துள்ள மாட மாளிகைகளிலெல்லாம் நீண்ட கொடிகள் விளங்கி மங்கலமாக விளங்கும் சுவாமிமலை என்னும் க்ஷேத்திரம் சிறப்புறுமாறு எழுந்தருளியுள்ள பெருமிதமுடையவரே! வாதம், சூலை, கண்டமாலை, குலைநோவு, கீல்களில்வந்து பெருந்துன்பத்தைச் செய்யும் நோய், குன்மம், சுவாசகாசம், வாயு, படர்தாமரை முதலிய படைகள், பீனசம், பின்னுமுள்ள நோய்களும் விலைமகளிர் தருகின்ற ஆபரணங்களாகும்; இந்நோய்களுடன், கன்ம மிகுதியால் வரும் தொழுநோய் தொடர்ந்து புண்களுற்று, பாயும் படுக்கையுமாகி இடைவிடாமல் கிடந்து வலிகுன்றி இருந்து, இவைகளால், தேவரீருடைய பாத கமலங்களின்மீது அன்பு செய்தலை அறவே கைவிட்டு, பாவமாகிய கள்ளைக் குடித்து அறிவு மயங்கி, குற்றம் பொருந்திய பந்த பாசமான வலையிற் கட்டுண்டு உழன்று, ஈன மிகுந்த பொருட் பெண்டிர் வசமாகி அவர்க்குஉறவாகி, அடியேன் பெருமை குன்றியதின் பிறகு, உலகினர் 'மூடன்' என்று என்னை இகழுமுன், தேவரீர் தண்ணருள் சுரந்து வந்து அடியேனை ஆண்டருள்வீர்.

விரிவுரை:

வாதமோடு........... ....எனவாகும்:---

அரிதிற் றேடிய பொருளை நல்வழியிற் செலவழிக்காமல்' பொருட் பெண்டிருக்கு அளவின்றித் தந்து, அவர் விரும்பிய ஆபரணங்களை யெல்லாம் பூட்டியதற்குப் பதிலாக, அவர்கள், வாதம் சூலை முதலிய திருவாபரணங்களைப் பூட்டி யனுப்புவர்.

"அரியபெண்கள் நட்பைப் புணர்ந்து
பிணியுழன்று சுற்றித் திரிந்த
தமையுமுன் க்ருபைச் சித்தமென்று பெறுவேனோ"

திருப்புகழ்.

ஈரஅருள்:—

தீவினையாகிய வெயிலால் வாடி, நரகவேதனை யென்னும் தழலால் வெந்து, பிறவித் துன்பமென்னும் வெப்பத்தால் வெதும்பியுள்ள ஆன்மாக்களுக்கு ஆண்டவனருளே குளிர்ந்து ஈறிலா இன்பத்தை விளைவிப்பதால், "ஈர அருள்" என்று கூறியருளினர்.

சூதமகிழ் பாலை..........சோலைதுன்றி:---

முருகவேள் வாழுந் திருத்தலமாதலால் பல பூமரங்கள் வளம் பெற வளர்ந்து நெருங்கி இயற்கை யழகு செய்து கொண்டிருக்கின்றன. மகுட தோரணம் முத்து தோரணம் மாத்தோரணம் முதலியவற்றை வீடுகள்தோறுங் கட்டி எம்பெருமானது விழாவின் சிறப்பைக் கொண்டாடுகின்றனர் என்பதும் குறிக்கத் தக்கது.


நீடுகோடியே தழைந்து:---

ஒவ்வொரு வீடுகளிலும் அறக்கொடியை யுயர்த்தி வறியர்க்கு வழங்குகின்றனர் என்பதும் உன்னி உவக்கற்பாலது.

"மிகுகொடை வடிவினர் பயில் வலிவலம்" "தருமமிகு சென்னை" என்ற திருவாக்குகளால் பெருமான் உறையும் தலங்களில் தரும சொரூபிகள் வாழ்கின்றனர் என்பது தேற்றமாகின்றது. ஆதலால், சுவாமிமலையில், வீடுகள்தோறும் அறக்கொடி நாட்டி அளவற்ற தருமஞ் செய்கின்றனர் என்பது புலனாகின்றது.

கருத்துரை:

சுவாமிமலையில் எழுந்தருளிய எம்பெருமானே! அடியேன் பொருட் பெண்டிர் வலைப்பட்டு, பிணியால் வருந்தி உலகினர் பழிக்கு ஆளாகுமுன் தேவரீர் தண்ணருள் புரிந்து ஆட்கொள்வீர்.



ஓம் குஹாய நம :

கந்தரலங்காரம்

(128-வது பக்கத் தொடர்ச்சி.)

(20) கோழிக் கோடிய னடிபணி யாமற் குவலயத்தே
வாழக் கருத மதியிலி காளுங்கள் வல்வினைநோய்
ஊழிற் பெருவலி யுண்ணவோட் டாதுங்க ளத்தமெல்லாம்
ஆழப் புதைத்துவைத் தால்வரு மோநும் மடிப்பிறகே.

பதவுரை:

கோழி கொடியன் - சேவலைக் கொடியாக உயர்த்திய செவ்வேட் பரமனது, அடி பணியாமல் - திருவடிக் கமலங்களை வணங்காமல், குவலயத்தே - இப் பூதலத்தின்கண்ணே, வாழ கருது - வாழ்வதற்கு நினைக்கின்ற, மதி இலிகாள் - அறிவில்லாதவர்களே! உங்கள் - உங்களுடைய, வல்வினை நோய் - வலிய தீவினையாலுண்டாகும் நோயாகிய, ஊழின் பெருவலி - ஊழினது பெரிய வலிமையானது, உண்ணவொட்டாது - செல்வத்தை அனுபவிக்க விடுவதில்லை, உங்கள் அத்தம் எல்லாம் - உங்களுடைய செல்வம் முழுவதையும், ஆழ புதைத்து வைத்தால் - ஆழமாக மண்ணில் புதைத்து வைத்தீர்களானால், நும் அடிப்பிறகே வருமோ - நீங்கள் உடலை விட்டு நீங்கும்போது உங்கள் காலடியின் பிறகே தொடர்ந்து வருமோ? (ஒருபோதும் வரமாட்டாது)

விரிவுரை:

கோழிக் கோடியன்:---

புறத்திருளை நீக்கப் புணரியில் எழும் சூரியனது வரவுணர்த்தி சேவல் இன்பத்தைநல்கும். அகத்திருளை நீக்க அருளா

ழியில் எழும் குகப் பிரமமாம் ஞான சூரியனைக் கூவி யழைத்து அச் சுர ஞானபானுவின் வரவுணர்த்தி பேரின்பத்தை வழங்கும் நாத சொரூபியாக எம்பிரான் கொடியிலுள்ள சேவல் விளங்குகின்றது.

அடிபணியாமல் ... வாழக்கருது மதியிலிகாள்:---

முருகப் பெருமானது திருவடித் தாமரையை வணங்குவதே அறிவுடைமையாகும். அறிவு பெற்றதற்குப் பயன் இறைவனை வழிபடுவதே. இறைவனை யறியும் அறிவே மெய்யறிவு. அவ்வறிவு பெறாதவர்கள் அறிவிலிகளே.

"அவனுடைய அறிவெல்லாம் எமையறியும் அறிவே"

என்ற சிவபிரான் திருவாக்கையும் உன்னுக.

ஊழில் பெருவலி:---

பொருள் ஈட்டுவதற்கு ஒருஊழ்; அதனைத் துய்ப்பதற்கு ஒரு ஊழ். சிலர் ஓயாமல் உழைத்த பொருளை யீட்டி அதனைச் சிறிதும் அனுபவிக்காமல் பொருள் காக்கும் பூதம்போல் காத்திருந்து வீணே விளிவர். பனியால் வாடுபவன் ஓயாமல் சருகு தேடிக் குளிர்காயாமல் உழல்வதுபோலாகும். ஊழின்வலி உண்ணவொட்டாமல் தகைகின்றது.

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்" —திருக்குறள்.

அழப் புதைத்து வைத்தால்:---

பண்டைக் காலத்தில் காகித நாணயம் இன்மையாலும் சேம நிதி நிலயங்கள் (Bank) இன்மையாலும் செல்வங்களைப் புதைத்து வைப்பது வழக்கமாயிருந்தது.

"பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்து வைக்குங்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்"

—ஔவை.

"தீதற்ற செல்வமென் தேடிப்புதைத்த திரவியமென்"

—பட்டினத்தடிகள்.

"தேடிப்புதைத்துத் திருட்டிற் கொடுத்துத் திகைத்திளைத்து
வாடிக் கிலேசித்து வாழ்நாளை வீணுக்கு மாய்ப்பவரே"

—அருணகிரிநாதர்.

என்ற வாக்குகளால் விளங்குமாறு காண்க.

வருமோ நும் அடிப்பிறகே:---

மரண யாத்திரை போகுங்கால் தேடிப் புதைத்த செல்வம் உடன் தொடர்ந்து செல்வதில்லை.

"அத்தமும் வாழ்வும் அகத்துமட் டேவிழி யம்பொழுக
மெத்திய மாதரும் வீதிமட்டே" என்ற

பட்டினத்தடிகள் திருவாக்கையும் நோக்குக. நாம் செய்த தருமமே தொடர்ந்து வந்து மறு பிறப்பில் உதவி செய்யும்.

பொங்கார வேலையில் வேலைவிட் டோனருள் போலுதவ
எங்கா யினும்வரும் ஏற்பவர்க் கிட்ட(து) இடாமல்வைத்த
வங்கா ரமுமுங்கள் சிங்கார வீடு மடந்தையருஞ்
சங்காத மோகெடு வீர்உயிர் போமத் தனிவழிக்கே

—அலங்காரம்.

கருத்துரை:

குமாரக் கடவுளை வணங்காமல் வாழக் கருதும் அறிவிலிகளே! உங்கள் செல்வத்தை நீங்கள் செய்த ஊழ் உண்ணவொட்டாது; அவைகளை ஆழப்புதைத்து வைத்தால் உம்முடன் மறு பிறப்புக்குத் தொடர்ந்து வாராது.

ஓம் குஹாய நம:

சிவானந்தலஹரீ

(ஆதிசங்கரர் அருளிச்செய்தது)

(129-வது பக்கத் தொடர்ச்சி)

(65) ப3ஹு4வித4 பரிதோஷ பா3ஷ்ப பூர-
ஸ்2புட புலகாங்கித சாரு போ4க பூ4மிம்!
சி3ரபத3 பலகாம்க்ஷி ஸேவ்ய மாநாம்
பரம ஸ3தாசிவ பா4வநாம் ப்ரபத்3யே!!

பதவுரை.

பஹுவித பரிதோஷ பாஷ்ப பூரஸ்புட புலகாங்கித சாருபோகபூமிம்	அநேக விதமான மகிழ்ச்சியின் கண்ணீர்ப் பெருக்கம் பிரகாசிக்கின்ற மயிர்க்கூச் செறிதல் இவைகளுக்கு அழகான அநுபோக இடமாயும்,
சிரபத பலகாம்க்ஷி ஸேவ்ய மாநாம்	நிலைத்திருக்கும் இடமாகிற (மோக்ஷ மாகிற) பயனை விரும்புகின்றவர் களால் அடையப்போகிறதாயு மிருக் கின்ற
பரமஸதாசிவ பாவநாம்	மேலான பரமசிவனுடைய தியானத்தை,
ப்ரபத்யே	அடியேன் சரணமாக அடைகின் றேன்.

பொழிப்புரை:

ஆனந்தக் கண்ணீர் பெருக உடல் புளகிதமுற விளங்கும் பக்திக்கு மனோகரமான போகபூமியாயும், நிலைபேறுடைய திருக் கைலாய மலையை விரும்புபவர்களால் சேவிக்கத் தக்கவராயுமுள்ள சிறந்த சிவபெருமானுடைய தியானத்தைச் சரணமாக அடை கின்றேன்.

உ

ஓம் குஹாய நம:

கந்தர் திருவிளையாடல்

(134-வது பக்கத் தொடர்ச்சி.)

மறுநாள் அதிகாலையில் சூரபன்மன் எழுந்து காலைக்கடன்களை முடித்து, அத்தாணி மண்டபத்தை யடைந்து, பானுகோபன் அடைந்த அபசயத்தை நினைந்து சினமூண்டு, தானே போருக்கேக எண்ணி, ஆயிரங்கோடி ஒற்றர்களை விடுத்து, கடல்கள் தோறுமுள்ள படைகளைத் திரட்டினான். பல படைக்கலங்களைத் தாங்கிய இலக்கம் வெள்ளம் அசுர சைந்யங்கள் வந்து ஆரவாரித்தனர். அதனைக் கண்ட சூரன் மகிழ்ந்து, போர்க்கோலங்கொண்டு தும்பை மாலையைச் சூடி மேருகிரி போன்ற ஒரு பொற்றேரி லேறிப் புறப்பட்டான். சிங்கமுகனுடைய குமாரன் அதிசூரனும், தாரகனுடைய குமாரன் அசுரேந்திரனும் அவனுடன் சென்றார்கள். அவர்களைப் படைகளைக் காக்குந் தலைவராக்கினான். ஆலகால விஷம்போல் சூரன் இலக்க வெள்ளம் சேனைகள் சூழப் போயினான். எழுகடலொலிபோல் பல பேரிகைகளை யறைந்தார்கள். தூளி எழுந்து கதிரவனை மறைக்க விண்ணும் மண்ணும் இருண்டன.

இந்திரன் ஓடி சூரன் வருகையை சுப்ரமண்ய மூர்த்திக்கு உரைத்து "எம்மைக் காத்தருளும்" என்று வேண்டினான். குமாரக் கடவுள் வாயுதேவன் செலுத்தும் மணித் தேரிலூர்ந்து புறப்பட்டார். தேவர் மலர்மாரி பொழிந்தனர்; நாரதாதியர் பாடினர்; முரசுகள் அதிர்ந்தன; இலக்கத் தொன்பதின்மரும் ஏனைய பூத கணங்களும் சூழ்ந்து சென்றனர். இருதிறப் படைகளும் பொருதனர்; பூதர் அசுரர்களை மலை மரம் வாள் முதலியவைகளை எறிந்து ஆயிரங் கணக்காகக் கொன்றனர். அசுரர்களும் பூதரைப் படைகளையேவி சின்னப் படுத்தினர். அவுணசேனை யழிவதைக் கண்ட சேனைத் தலைவனும் சிங்கமுகன் மகனுமாகிய அதிசூரன் 2000 ம் குதிரைகள் பூட்டிய தேரின்மீதூர்ந்து 2000 ம் சேமத்தேர் சூழச்

சென்று பூதர்களை எதிர்த்து அமராடினன். விட்டுணுவினுடைய சக்கரப் படையை உண்டுமிழ்ந்தவரும், போரில் சிங்கவேறுமாகிய உக்கிரர் வடவைத் தீயைப்போல் சினந்து அதிசூரன் மார்பில் ஒரு தண்டாயுதத்தை எறிந்தார். அவன் இறந்தான் என்று அசுரர் அஞ்சினார்கள். அத் தண்டம் அவனுடைய மார் கவசத்தை யழித்தது. அதிசூரன் உக்கிரர்மேல் நூறாயிரம் கணைகளை யேவி உக்கிரர் உடம்பைப் புண்படுத்தினான். உக்கிரர் சினந்து பாய்ந்து அவன் தேரை அழித்தார். அவன் வேறு தேர்மீது பாய அதனையும் அழித்தார். அதிசூரன் அக்கினிப் படையை விடுத்தான். உக்கிரர் முருகக் கடவுளைத் தியானித்து அதனைப் பற்றி விழுங்கினார். வாயு, வருணன், இந்திரன், கருடன் முதலிய தேவதாஸ்திரங்களை அவன் விடுக்க அவைகளை யெல்லாம் உக்கிரர் விழுங்கிவிட்டார். பிரமாத்திரத்தை விடுத்தான்; அதையும் விழுங்கினார். விட்டுணுப் படையையேவ அதனையும் விழுங்கிவிட்டார். அதிசூரன் கண்டு அச்சமும் ஆச்சரியமும் கொண்டான். தேவர்கள் கண்டு வியந்து பிரமதேவரை வணங்கி, "இவர் எமது படைக்கலங்களையும், உமது கணை, நாராயணர் கணைகளையும் பிடித்துவாழைப்பழம்போல் விழுங்குகின்றனரே? இதென்ன வியப்பு?" என்று வினவ, நான்முகர், "தேவர்களே! இவருக்கு இதொரு பெரிய காரியமன்று; அளவிறந்த அண்டங்களையும் விழுங்கும் வன்மை யுடையவர்; சிவபெருமானிடம் அளப்பற்ற வரம் பெற்றவர்; இவர் எம்மினும் பெரியவர்; என்றும் அழிவில்லாதவர் என்று சொல்லிப் புகழ்ந்தனர். தேவர் வாழ்த்தினார்கள். அதிசூரன் உக்கிரர்மேல் சிவாத்திரத்தை விடுத்தான். அது சங்கார கர்த்தாவைப்போல் சீறி, நஞ்சு பாம்பு, யமன், பூதம், பேய், தீ இவைகளை யுண்டாக்கிக் கொண்டு உக்கிரர் மீது வந்தது. உக்கிரர் கரத்திலிருந்த சக்கரத்தை எறிந்துவிட்டு சிவமூர்த்தியைத் தியானித்து நின்றார். சிவகணை அவரைக் கண்டு "நிராயுதனாகிய எம் அடியனை அழிக்கேன்" என்று ("நிராயுதன் மேல் விடுத்தால் மீண்டும் நம்மிடத்தே வந்துவிடும்" என்று சிவபிரான் சொல்லி அதிசூரனுக்குத்தரப்பட்டதாதலால்,) மீண்டும்சிவபெருமானிடம் அடைந்தது. அதிசூரன் இவன் 'சிவமூர்த்தியோ' என்று ஐயுற்று ஒரு தண்டத்தை எடுத்துக் கொண்டு உக்கிரர்

தோளில் அடித்தான். உக்கிரர் வெகுண்டு அத் தண்டாயுதத்தைப் பறித்து அவனுடைய மார்பில் அடித்தார். அவன் கீழ்விழுந்து பதைத்து உயிர் துறந்தான். உக்கிரர் மீது உம்பர் மலர் மழை பொழிந்தனர்.

தாரகன் மகனாகிய அசுரேந்திரன் அதுகண்டு வெகுண்டு உலகம் அதிர நாணொலி செய்து பாணமழை பொழிந்து பூதரைக் கொன்றான். உதிர வெள்ளம் ஓடியது. பூதசேனைத் தலைவர்களில் கனகர், உன்மத்தர், மந்தர், சிங்கர் என்பவர் அவனை எதிர்த்துப் போராடி யயர்ந்தனர். இலக்கம் வீரரும் எதிர்த்து அமராடி இளைத்தனர். அதனைக் கண்ட வீரவாகுதேவர் வேலவரைத் தியானித்து அசுரேந்திரனை எதிர்த்து பல கணைகளை விடுத்து அவனுடம்பைப் புண்படுத்தினார். அசுரேந்திரன் 1000ம் பாணங்களை விடுத்து வீரவாகுதேவர் திருமேனியையும் புண்படுத்தினான். அசுரேந்திரன் வீரவாகுதேவருடைய வில்லைப் பொடிசெய்தான். வீரவாகுதேவர் வேறு வில்லை யெடுத்து அவனுடைய வில் தேர் குதிரைகளை யழித்தார். அசுரேந்திரன் வேறு தேரேறி வீரவாகுதேவருடைய தேரை யழித்தான். வீரவாகுதேவர் வாட்படையுடன் வானில் எழுந்து அவன் தேரிற் பாய்ந்து ஒரு கரத்தை வெட்டினார். அசுரேந்திரன் கையிழந்து ஒரு தண்டை யெடுத்து அவர்மீது மோதினான். அவர் பாதத்தினால் அவன் தலையில் உதைத்து விண்ணிற் சென்றார். அவன் வாளை எடுத்துத் தொடர, வீரவாகுதேவர் தமது வாளினால் அவனது தலையைத் துணித்தார். அவன் உயிர் துறந்திறந்தான். அமரர் ஆர்த்தனர். அசுர சேனைகள் அஞ்சி ஓடின.

அதிசூரன் அசுரேந்திரன் என்ற குமாரர்கள் இருவரும் இறந்ததனையும் அசுரசேனை அழிவதையுங் கண்ட சூரபன்மன் வடவைத் தீயைப்போல் வெகுண்டு வில் வளைத்து நாணொதை செய்தான். குலமலைகள் பொடிபட்டன; பூதர்களில் சிலர் அஞ்சி இறந்தனர்; சிலர் ஓடினர்; அவ் வொலி பன்னிரண்டு ஆண்டுகள் ஒழிந்திலது. தருமம் அஞ்சியது. இயமனும் இந்திரனும் அஞ்சினர்; நூற்றெட்டுப் படைத் தலைவரும் அதுகண்டு சூரனை எதிர்த்தனர். சூரன் விடுங் கொடுங் கணைகள் பட்டு அவர்கள் அனைவரும்

வீழ்ந்தனர். இலக்கம் வீரரும் வந்து ஒரு முகூர்த்த நேரம் போராடி வலி குன்றி தேரும் வில்லுமிழந்து புண்பட்டு வீழ்ந்தனர்.

வீரமார்த்தாண்டர் எதிர்க்க சூரன் ஆயிரம் அம்பு தொடுத்து அவர் வில்லை அறுத்து மார்பைப்பிளந்தான்; அவர் அயர்ந்து வீழ்ந்தார். வீரராக்கதர் எதிர்த்து கணைகளைச் சிந்த சூரன் அவர் வில்லைத் துணித்தான். அவர் வாள்கொண்டு அவன் வில்லை வெட்ட, வாள் முறிந்தது. சூரன் அவரை எடுத்து எறிய வீழ்ந்து மூர்ச்சித்தனர். வீரமகேந்திரர் எதிர்த்து சக்கிராகாரமாய் தேருடன் திரிந்து அமராடி சூரன் கணைகளால் கலங்கி வீழ்ந்தார். வீரராக்கதரும் வீரமாமகேச்சுரரும் எதிர்த்து அமராடி இளைத்தனர்; வீரகேசரி வந்து போர் புரிய சூரன் அவர் வில்லை யறுத்து அவர் நெற்றியை நூறு கணைகளால் துளைத்தான். உதிர வெள்ளத்துடன் அவர் ஒருமலையை எடுத்தெறிந்தார். அதனை அவன்விலக்கி அவர் மார்பில் நூறு கணைகளை யழுத்தினான். அவர் அவன் தேரிற் பாய்ந்து மார்பில் அடித்தார். அடித்த கை பிளந்து இரத்தம் பெருகச் சோர்ந்து வீழ்ந்தார். சூரன் மயங்கினவனைக் கொல்லுவது பழி என்று எண்ணி எடுத்துப் பாற் கடலில் எறிந்தான். அவர் உயிர் பதைத்து எழுந்து வந்து இளைத்து நின்றார். வீரமாபுரந்தார் எதிர்த்து யமாத்திரம் விடுக்க அது அவன் மார்பிற் பட்டு துகளாயினது. இலக்கம் கணையினால் சூரன் அவரைப் புண்படுத்த மயங்கினார். வீரராந்தகர் எதிர்த்துப் போராடி இளைத்தனர்.

அதுகண்ட வீரவாகுதேவர் இரங்கி சூரனை வந்து எதிர்த்தார். சூரன் "நீ நமது நகரை யழித்து அசுரரைக் கொன்று உயிர் பிழைத்து வந்தாய்; இன்றோடு நீ அழிகுவை; தூதனாக வந்தால் உய்யலாம்; இன்றே நீ அழியு நாள்'' என்றான். வீரவாகுதேவர் "யான் தூதனுமாவேன்; போர்வீரனு மாவேன்; யாவையுஞ் செய்ய வல்லேன்; போர் செய்குதி'' என்றார். சூரன் கனல்மழை சிந்தக் கனன்று நாணொலி செய்தான். மேருமலை நடுங்கியது; கடலும் உலகமுங் கலங்கின; சேடன் நடுங்கினன். வீரவாகு தேவர் நாணொலிசெய்ய வானும் மண்ணுந் துலங்கின. சூரன் விட்ட இலக்ஷக்கணக்கானபாணங்களை வீரவாகுதேவர்விலக்கி நூறு பாணங்களை விட்டனர். அவைகள் சூரன் நெற்றியில் பட்டு வைர

பலையிற் பட்ட பொன்னூசிகள் போல் பொடிந்தன. வீரவாகு தேவர் "எம்பிரானுடைய வேற்படையையன்றிவேறுஎந்தப்படையும் இவனுடம்பைத் துளைக்காது" என்று பின்னும் பலகோடி கணைகளை விட்டார். சூரன் அவைகளை மாற்றி எட்டுஅம்புகளைவிட அவை அவர் புயத்தைத் துளைத்து உதிர வெள்ளத்தைப் பெருக்கியது. வீரவாகுதேவர் சூரன் தேர்ப்பாகரைப் புண்படுத்த, சூரன் வீரவாகுதேவருடைய தேரை அழித்தான். அவர் வேறு தேரேறி அக்கினிப் படையை விடுக்க சூரன் சிரித்து எதிராகப் பாணம் தொடுக்காமல் அசட்டையாக இருந்தான். அக்கினிப்படை அவன் மீது பட்டு நூறுயிரந் துண்டுகளாயிற்று. வீரவாகுதேவர் யமன், சூரியன், இந்திரன், வருணன், நிருதி இவர்களது படைகளை ஏவ அவைகளும் அவனுடம்பிற் பட்டுத் தூளாயின. பின் பிரமப் படை நாரணப் படைகளை விடுந்தார். அவைகள் ஆர்த்து வந்து வைர மலையைத் துளைக்க வந்த வண்டுகள் போல் வலி யிழந்து பொடியாயின. வீரவாகுதேவர் சூரபன்மன் சிவ பெருமானிடம் பெற்ற வரத்தின் வலியைக் கண்டு வியந்தனர். சூரன் சிரித்து "மூவர் முதல்வராம் முக்கட் பெருமான் தந்த வர பலத்தால் எப் படையும் என்னை யழிக்குந் திறமுடையன வல்ல; அவைகளை யான் தடுக்கவுஞ் செய்யேன்; வடவையிடம் வந்த வண்டுகள் போல் அவைகள் என்னை அணுகி யழியும்" என்றான். வீரவாகுதேவர் சிவாத்திரத்தைப் பூசித்து விடுத்தார். சூரனும் சிவாத்திரத்தை விடுத்தான். இரு படைக்கலங்களும் எதிர்த்து தீ, நஞ்சு, இடி, வாயு, இருள், கதிர், யமன் இவைகளைத் தோற்றுவித்து அமராடி, "இனி உலக மழியும்" என்று வானவர் துதிக்க, தம்மை விடுத்தோரிடமே மீண்டு சென்றன. சூரபன்மன்மீது வீரவாகுதேவர் ஒரு வேலை யேவ அது அவன் மார்பிற் பட்டு பொடிந்தது. சூரன் பிரம விட்டுணுக்களையுங் கொல்லத் தக்க ஒரு தண்டாயுதத்தை எடுத்து வீரவாகுதேவர் மீது எறிய, அது அவர் விடுத்த பாணங்களை யெல்லாம் பொடிசெய்து கொண்டு அவர் மார்பைப் பிளந்து சென்றது. உதிர வெள்ளம் ஓடியது. வீரவாகுதேவர் அவ்வுதிர வெள்ளத்தில் பிளந்த மார்புடன் மூர்ச்சித்து வீழ்ந்தார். தேர்ப்பாகன் அவரைத் தேற்றும் பொருட்டு

ஓம் குஹாய நம :

கற்பு.

(138- வது பக்கத் தொடர்ச்சி)

நளாயனி

நளாயனியின் தளர்வறு கற்பின் உறுதியும், மயர்வறு மதியின் நலத்தையும் மௌத்கல்ய முனிவர் கண்டு, "இவளை நான் எவ்வாறு ஆராய்ந்தறிவேன்? இவள் கற்புறுதி என் சோதனையில் அகப்படாது போலும். தோல்வி யுறவே இத் துறையில் நான் இறங்கினேன். மூவாசையும் வெறுத்து தேவர்சபை நடுவில் இருந்த நான், நாவைக் காக்காமல் தேவர் கோமானிடம் "இவளையாய்ந்தறிவல்" என்று கூறி வந்தேனே, இவளுடைய இடையறா அன்பும் புடை பெயராத் தொண்டும் என்னை வசப்படுத்திவிட்டதே! இரவு முழுதும் நமது பாதத்தை வருடிய வண்ணமாகவே இருக்கின்றாள். இவள் உறங்குவதை இதுகாறுங்கண்டதேயில்லை. இவளுடைய தெய்வக் கற்பின் பொற்புதான் யாது? என் மனதில் குடிகொண்டு விட்டனள். இராஜ சுகத்தில் இன்புற்று பல்லாயிரம் பணிப் பெண்கள் உபசரிக்க இருந்த இப் பெருமாட்டி தாய், தந்தை, இருளைகள், சுற்றம், செல்வம், உணவு, உடை, இத்தனையும் விட்டு நமது திருவடியே தஞ்சம் என்று சிறிதும் உள்ளம்

வேறு ஒரு புறத்தில் தேரைச் செலுத்திச் சென்றனன். வீழ்ந்த வீரவாகுதேவர் இறப்பார் என்று சூரன் எண்ணி பூதர்மேல் கணை மழையைப் பொழிந்தான். பூதர் பலர் அழிந்தனர்; பலர் இரிந்தனர்.

(தொடரும்)

வேறு படாது உவகையுடன், குறிப்பறிந்து நம்மை உபசரித்து வருகின்றனள். மற்றொருவகையில் சோதிக்கவேண்டும்" என்று எண்ணி, ஒருநாள் நள்ளிரவில் மெல்ல எழுந்து நளாயனி சற்று உறங்குவதைக் கண்டு வெளியே சென்று பிரிந்தார்.

நளாயனி திடீரென்று எழுந்து கணவனைப் படுக்கையில் காணாதவளாய், உள்ளம் உடைந்து, பன்னக சாலையின் வெளிப் புறத்து வந்து கூவினள். கணவன் குரல் கேட்டிலது. அவ்விரவின் இருளினும் அவள் உள்ளம் இருண்டது. கணவன் எங்கு சென்றிருப்பார்? தனக்குப் பாழுந் தூக்கம் எவ்வாறு வந்தது? என்று நொந்து கொள்வாள். ஆருயிர்க் காதல! அன்புருவமே! அருள்வெள்ளமே! தவப்பயனே! அடியேனைத் தனித்து விட்டு எங்கு சென்றீர்? யான் செய்த தவறு யாது? உமது உள்ளம் வெறுக்குமாறு யான் ஒன்றும் செய்திலனே?" என்று புலம்புவாள். கதிரவன் உதயகிரி சேர்ந்தான். நளாயனி கணவன் வருவான் என்று மலர், தருப்பை, கனி இவைகளைச் சேகரித்து வைத்து எதிர் பார்த்தாள்; கணவன் வந்தானில்லை.

பிரியே னெனக்கைப் பிடித்தனையே வன்னி
கரியே யெனப்புகன்றாய் கண்ணொளியே காதற்
கிரியே தமர்விடுத்துன் கீழ்ப்படிந்தேன் ஆவி
தரியேன் தயாநிதியே தஞ்சமெனை யாண்டருள்வாய்.

"அன்புக் களஞ்சியமே! மாலைப் பொழுதாகியும் உம்மைக் காண வில்லையே! எங்கு சென்றீர்? தவத்தைத் தவிர வேறு வேலை உமக் கில்லையே? அருங்குணக் குன்றே! என் உயிர் உலைகின்றதே! என்னைச் சோதித்தற் பொருட்டு எங்காவது ஒளிந்திருக்கின்றீரா? இன்னும் சோதிக்க வேண்டாம். அஞ்சலென் றருள்வீர்" என்று வாய்விட்டு அலறினள். காடெல்லாம் சுற்றிப் பார்த்தனள். கதிரவன் அத்தகிரியை படையலானான். நளாயனி மாலை நேரத்தில் ஒரு வேளை பன்னக சாலைக்கு வந்தாலும் வருவார் என்று எண்ணித் திரும்பிப் பன்னக சாலைக்கு வந்தாள். கணவனைக் காணாது கலங்கினள். கணவனுக்கு என்ன இடையூறு நேர்ந்ததோ என்று ஏங்கினள்.

வாசற்படியின் முன்னின்று நாற்றிசையும் நோக்கி நோக்கிக் கண்பூத்தனள். ஆங்கொரு இளவரசன் வில்லும் அம்பும் ஏந்தி வேட்டை யாடுவான் போல் வந்தனன். அநங்கனினும் அழகின் மிக்கவன்; மதயானைபோல் பெருமித நடை யுடையவன்; காண்பார் கண்ணுங் கருத்துங் கவருங் கட்டழகுடையவன். அவனைக் கண்ட நளாயனி சிறிது மனந்தேறி, அவனருகிற் சென்று, "அண்ணா! தாங்கள் வேட்டை யாடிக்கொண்டு வந்த வழியில் என் மகிணராகிய மாதவரைக் கண்டீரோ?" என்று வினவினள். இளவரசன், "பெண்ணரசே! ஒரு முனிவனை புலி கொன்று தின்னக் கண்டேன்; அம் முனிவன் நின் கணவன் போலும்" என்றான். நளாயனி "அண்ணா! என் கணவன் கனலும் அஞ்சுந் தவத்தினர். சிங்கம் முதலிய கொடிய விலங்குகள் அவர் திருக்கண்ணோக்கத்தாலேயே சாந்தத்தை யடையும். அவர் தவ வலியால் யாவையும் வென்றவர். நீ வேறு ஒருவனைக் கண்டிருக்கலாம்" என்றாள். இளவரசன் "மாதரசே கையாலாகாத கிழ முனிவனாகிய நின் கணவனை வானமளவும் உயர்த்துகின்றனை. அவனிடம் நீ என்ன அற்புதத்தைக் கண்டனை? அவனை மணந்து இதுகாறும் நீ பெற்ற இன்பம் யாது?" என்றான்,

நளாயனி "ஐயா! நீர் பெரியாரியல்பை உணரவில்லை. அவர் பெருமையை நீரறியீர். பெண்களுக்குக் கணவன் திருவடி வழிபாட்டினும் சிறந்த இன்பம் யாதுளது? அவர் அருகிலிருப்பதே எனக்கு சுவர்க்க லோக வாசம்" என்றாள். இளவரசன், "ஆரணங்கே! நீ ஒரு பேதை. என்போன்ற இளைஞனோடு கூடி வாழ்வதே சிறந்த வாழ்க்கை. அதுவே இன்பம். அச்சுகத்தை நீயறிந்திலை. கிழ முனிவன் உன்னை ஏமாற்றி மணந்து கொண்டான். நல்ல வேளையாய் அவன் புலிவாய்க்கு இரையானான். இனியாவது அவனை மறந்துவிடு; என்போன்ற இளைஞனை விரும்பு" என்றான். நளாயனி சீற்றங் கொண்டு "அறிவிலியே! உன்னை மன்மகனென்று எண்ணினேன். தகாதனவகளைச் சொல்லினை. நீ ஒரு பேதை. மனிதத் தன்மை நின்னிடம் சிறிதும் இல்லை. நின்னுடன் பேசுவது குற்றம். இங்கு நில்லாதே. விரைந்துபோ" என்றுரைத்து பன்னசாலைக்குள் நுழைந்தாள்.

இளவரசன் "மடமயிலே! இறந்த கணவனை இனி எண்ணி வருந்தாதே; என்னைக் கணவனாக நினை. உனது தவத்தால் என் மனம் உன்னிடம் பதிந்து விட்டது. உன் கணவனைப்போல் நான் உன்னைத் தனியே காட்டில் விட்டு நீங்கேன். இமைப் போதும் பிரியாது இன்பந் தருவேன். ஆயிரந் தாதியர் பணி கேட்க இராணியாக என் அருகில் மணித் தவிசில் இருந்து இன்புறலாம். தானே வந்த பாக்கியத்தைத் தள்ளாதே, நீ என்னை விரும்பு. வானமுது வேண்டினும் வழங்குவன். நின் மனம் விரும்பிய போகத்தை நல்குவன். பெண்ணமுதே! நின் கணவன் ஒரு வேளை வந்தால் அவனை ஓம்பால் வானுலகிற்கு அனுப்புவேன். என் வடிவழகைப் பார்" என்று பிதற்றிக் கொண்டே பன்னக சாலைக்குள் நுழைந்தான்.

நளாயனி "அடா பாதகா! வீணே கெட்டழியாதே. பிறன் மனைவியைத் தாயாக நோக்குவதன்றோ போரண்மை. என் போன்ற அநாதைப் பெண்களின் கற்பைக் காப்பதன்றோ அரசரது கடமை. நீ எனக்கு நன்மை செய்யாவிடினும் தீமையாவது செய்யாமலிருக்க வேண்டாவோ? பாதாரத்தை விரும்பி யழிந்தோர் பலர்; இராவணன், விராதன் முதலியோர் குடி முழுதும் அழிந்ததை நீ யுணர்ந்திலை போலும்; கெடுமதியை விடு; நெருப்பைப் பழமென்று எண்ணும் விட்டிலைப்போல் அழியாதே. என்னை கற்புக் கனலென்று அறி. என்னிடம் நெருங்கினல் வெந்தழிவை. துராத்மாவே! என்னை நின் தங்கையாக எண்ணுதி. நின் மனைவியை ஒருவன் விரும்புங்கால் உனது உள்ளம் எவ்வாறு வெதும்பும் என்பதைச் சற்று எண்ணிப்பார். பிறன் மனைவியாகிய என்னை விரும்புவது எத்துணைப் பாவம்? பழி சுமக்காதே. காகாசுரன் அடைந்த கதியை அடையாதே. பாவி! என்னை விரும்பிப் பார்க்கும் உன் கண்கள் ஒளி மழுங்கி விடும். வேண்டா! வேண்டா! இனியாவது நல்லொழுக்கத்தைக் கைக்கொள். பிறன் மனைவியை விரும்பும் பேதையைக் கூற்றுவன் நெருப்பிற் காய்ச்சிய செப்புருவைத் தழுவச் செய்வான். இம்மையிற் பழியும் பகையும் மறுமையிற் 'பாவமுந் துன்பமும் உண்டாகும்," என்று சொல்லிக்கொண்டிருக்கும் போதே, அத்தூர்த்தன் அவை களைச் செவிமடுக்கானுப், அவ்வம்மையை நெருங்கி, "மானே!

மயிலே! நீ என்னை வைததெல்லாம் வாழ்த்தியதாகும். உனது பாதமே கதியென வந்துளேன். மதனன் மலர்க்கணையால் வாடும் என்னைக் காப்பது நினது கடனேயாம். என்னை வெறுத்தால் உனது முன்பாகவே உயிர் துறப்பேன்'' என்று கூறித் தொடப் போனான்.

ஞாயனி புலியால் விரட்டப் படும் பெண்ணிளமான் போல் குலை குலைந்து பன்னகசாலையி னின்றும் வெளிப் போந்து, "ஆ! ஆ! என் ஆருயிர்த் துணைவா! ஓடிவாரும். என்னை இப் பாவியி னிடத்திலிருந்து மீட்டுக்கொள்ளும்'' என்று ஓடினாள். அவள் ஓடு மிட மெல்லாம் அவனும் விடாது தொடர்ந்து சென்றான். முட் புதர்களில் அவள் சீலை சிக்குண்டு கிழிந்தது. உடம் பெல்லாம் முட் செடிகளால் புண்பட்டது அவள் சென்ற இடமெல்லாம் கண்ணீர் ஆறுக வோடியது. இருளும் சூழ்ந்தது. மெல்லிய பாத முடைய அத் திருவாட்டி ஓடி ஓடி உடலும் உள்ளமும் களைத்து நின்றனள். இளவரசன் நெஞ்சம் இரங்கானாய் அவளை நெருங்கி னன். அக் கற்பரசி கனலெனச் சினந்து "அடா பாவி! என்னைத் தொடர்ந்த நின் கால்களும் என்னைத் தொட வந்த நின் கை களும் தொழு நோயால் அழுகி இரத்தமும் சீயும் ஒழுகி வேதனை யடையக் கடவது'' என்று சபித்தனள். அச்சாபத்தால் உடனே அவ் விளவரசன் உடலும் கை கால்களும் தீப் பற்றியதுபோல் எரியலாயின. அவன் உள்ளம் நடுங்கி வில்லையும் அம்பையும் எறிந்து விட்டு ஓடி ஒளிந்தான். ஞாயனி ஒருவாறு மனம் பதை பதைப்பற்று மெல்ல மெல்ல நடந்து பன்னக சாலை வந்து சேர்ந்து கணவனை எண்ணி கண்ணீர்ப் பெருக்கி நின்றனள்.

ஒளிந்த இளவரசன் அவ்வேடத்தை விட்டு பழையபடியே மௌத்கல்ய முனிவராகி, "அந்தோ! என்ன வேலை செய்தேன்? விளையை விலைக்கு வாங்கினது போலாயிற்றே! உத்தமியாகிய உயர்குண மனைவியைச் சோதிக்கக் கருதி இளவரசனாக உரு வெடுத்து அவளை காடெல்லாம் விரட்டி, அவள் உள்ளமும் உடலும் நடுங்கச் செய்தேனே. அந்தோ! அவள் நடுக்கத்தைக் கண்டு மனஞ் சிறிதும் இரங்காமல் துன்புறுத்தியதற்குப் பலன் கைமேல் கிடைத்து விட்டது. பாதக வியாதியாகிய தொழுநோய்

தொடரப் பெற்றேனே. இனி என் செய்வேன்? பூமேல் நடந்த அவள் பூம்பதம் கல்லிலும் முள்ளிலும் புண்படுமாறு விரட்டிய எனக்கு இது தகுந்த தண்டனைதான். கற்புடைக் காரிகையரை விரும்பும் காதகர் உடனே அழிவர் என்பதற்கு இது ஒரு பெரிய சான்று" என்று பலவாறு சிந்தித்து சிந்தை கலங்கி நின்றார்.

(தொடரும்)

கற்பின் அதிசய சக்தி

நமது பண்டைய நூற்களில் தீயைக்கொண்டு ஸ்திரீகளின் கற்பைப் பரிசோதிக்கும் வரலாறுகள் அநேகம் உள. ஆனால் தற்கால சமூகம் அவ்வரலாறுகளை நம்புகிறதில்லை. தற்கால மனிதன் அவைகளனைத்தும் கட்டுக் கதைகளென்றும் ஒருக்காலும் நடந்திருக்க முடியாதென்றும் நினைக்கிறான். ஆயினும் மாங்கிர் (Monghyr) ஜில்லாவில் 1938ஆம் டிசம்பர்மீ 6வ நடந்த கீழ்க்கண்ட சம்பவமானது அதைப்பற்றிக் கேட்பவர்களுக்கும் படிப்பவர்களுக்கும் மிகுந்த ஆச்சர்யத்தைக் கொடுக்கிறது.

பீஹார் மாகாணத்தில் மாங்கிர் (Monghyr) ஜில்லாவில் உலோ (Ulao) என்று ஒரு கிராம மிருக்கிறது. அதில் கோரக்பூர் (Gorakhpur) ஜில்லாவைச் சேர்ந்த சில கல் தச்சர்கள் சில மாதங்கள் தங்கி யிருந்தனர். அவர்கள் பக்கத்திலுள்ள கிராமத்தார்களுக்கு (அம்மி, ஆட்டுக்கல் முதலிய) இயந்திரக்கற்கள் கொத்திக் கொடுத்து அதனால் வரும் ஊதியத்தைக் கொண்டு பிழைத்து வந்தனர். அவர்களில் சுமார் 32-வயதுள்ள பெண்பால் ஒருத்தி இருக்கிறாள். அவள் தகப்பன் பெயர் ஜெயபால் கல்தச்சன்; புருஷன் பெயர் நாதுனி கல் தச்சன் அவளுக்கு இரு சிறு குழந்தைக ளிருக்கின்றன. அவர்கள் அவ்விட மிருக்கும் பொழுது பாபுலால் என்ற ஒருவன் நாதுனியைப் பார்த்து அவனுடைய மனைவி கற்பு தவறியவளென்றும் அவள் வயிற்றிலிருக்கும் குழந்தை சோரத்தினால் உண்டானதென்றும் கூறினான். அதற்கு அப்பெண்ணானவள் பாபுலாலைப் பார்த்து அவன்

சொல்லுவது சுத்தப் பொய் என்று பதிலளித்து விட்டு, தனக்குத் தன் புருஷனைத் தவிர வேறு ஒருவரிடமும் அன்பு கிடையாது என்று கடவுள் மீது ஆணையிட்டுக் கூறினாள். அதன் மேல் பாபுலால் அவள் கற்புடையவளா யிருந்தால் அவர்கள் ஜாதி முறைப்படி தன் கற்பை நிரூபிக்க வேண்டும் என்று கூறினான். ஆகவே 1938ஆம் டிசம்பர் மீ 6௨ செவ்வாய்க்கிழமை யன்று கீழ் வருமாறு அக்கினிப் பரீக்ஷை நடந்தேறியது.

அந்தக் கிராமத்தின் தென் கோடியில் ஓர் அரசமரம் இருக்கின்றது. அந்த மரத்தின் அடியில் காய்ந்த பசுஞ்சாணத்தைக் குவித்து தீ மூட்டப் பட்டது. அத்தீயில் சுமார் இரண்டு சேர் நிறையுள்ள சுத்தில் ஒன்று காயவைக்கப் பட்டது. மேற் குறித்த பெண்ணுக்கு ஸ்நானம் செய்து வைக்கப் பட்டது; இரண்டு கரங்களையும் சேர்த்து வைத்துக் கொள்ளச் சொல்லி இரண்டு உள்ளங் கையிலும் நெய் தடவப்பட்டது; உள்ளங் கைகளின்மேல் நெய் தடவப் பட்ட இரண்டரை அரசிலைகளை வைத்து மெல்லிய பருத்தி நூலினால் கைகளோடு சேர்த்துக் கட்டப் பட்டன. தீயிலிருந்து சிறிது இடை விட்டு விட்டு ஏழு எரியும் விராட்டிகள் வைக்கப் பட்டன. அப்பெண்ணும் தீயினருகில் நிறுத்தப் பட்டாள். அப்பொழுது அவ்வகுப்பினரின் தலைவன் பழுக்கக் காய்ந்த சுத்திலை தீயிலிருந்து இடுக்கியால் எடுத்து வைத்துக் கொண்டு அவளைப் பார்த்து "நீ கற்பு தவறாதவளாயின் இந்தப் பழுக்கக் காய்ந்த சுத்திலை உன் உள்ளங்கையில் வைத்துக் கொண்டு ஏழு அடி நடக்கவும்" என்று கூறினான். உடனே அப் பெண் சூரியனைப் பார்த்து "ஓ கடவுளே! நான் கற்புத் தவறாதவளாயின் அதை நிரூபி" என்று சொல்லிவிட்டு உள்ளங்கையில் அந்தக் காயும் இரும்பைப் பெற்றுக் கொண்டு, ஏழு அடி நடந்து பின்னர் அதைப் பூமியில் எறிந்தாள். அந்த இரும்பு விழுந்த இடத்திலுள்ள புல்லும் எரிந்து போயிற்று; அவ்விடத்துள்ள பூமியும் கீழே இரண்டங்குலத்திற்குச் சுடப்பட்டது; ஆனால் அப்பெண்ணின் உள்ளங்கையின் மீது கட்டப் பட்ட மெல்லிய பருத்தி நூலோ அல்லது அரசிலைகளோ சிறிதும் தீயால் சுடப் படவில்லை; உள்ளங்கைக்கும் யாதொரு துன்பமும் ஏற்படவில்லை.

ஸ்ரீ காழி மணியே போற்றி.

இருவினை ஒப்பு எப்படி?

(சிவன் சீரடியார் அடிநாய்: சிராப்பள்ளி நகரவாசி ஒருவன்.)

(144-வது பக்கத் தொடர்ச்சி.)

அறிவு:--- புண்ணிய பாவ வினைகள் அருவமாய் ஜடமாய் உள்ளவை. பருப்பொருள்கள் அன்று. அவைகளை ஒருவர் துலாக்கோலில் வைத்து எடைபார்த்தலு மின்று. பாவ கன்மப் பயனாக வரும் துன்பங்களை அநுபவித்துத் தீர்ப்பதல்லது, வேறு புண்ணிய வினையிபற்றி பாவங்களை ஒழித்தல் இயலாததாம். பாவவினைப் பயனாக துன்பங்களைப் புசித்தல் போன்று புண்ணிய கன்மப் பயனாகிய இன்பங்களை, பூமி சுவர்க்கங்களில், பிரத்தியேகமாக அநுபவித்தே தீரவேண்டும். நல்வினைப் பயனாகிய இன்பத்தினும், தீவினைப் பயனாகிய துன்பத்தினும், விருப்பும் வெறுப்பும் உடையவனாகாது, இப்பயன்கள் நம்முடைய முன்வினைக் கேற்ப, இறைவன் திருவருள் கூட்டு வித்தலால் திருவருட் செயலே எனக் காணுதலே, இருவினை ஒப்பாகும்.

இந்தத் தீப்பரீக்ஷையைப் பார்க்க சுமார் 200-ஆண்களும் பெண்களுமாகக் கூடி யிருந்தனர். அவர்களில் சிலர் கல்தச்சர்கள். பாக்கியெல்லாம் கிராமத்தார்கள். எல்லோரும் அக்கற்புக் கணி கலத்தைப் புகழ்ந்தனர். பின்னர் அப்பெண் சாவித்திரி தேவியின் வீட்டுக்கு அழைத்துப் போகப்பட்டு புஷ்பங்களும் மாலைகளும் துணிகளும் தின்பண்டங்களும் கொடுத்து உபசரிக்கப் பட்டனள்.

'கல்யாண கல்பதரு - ஏப்ரல் 1939'

குறிப்பு--- இந்த சம்பவம் உண்மையாகவே நடந்தது. கல்யாண கல்பதரு ஆசிரியர் நேரில் விசாரித்து உண்மையென்று உறுதி கண்டனர்.

பத்திராசிரியன்,

மனம்:--- தீவினை செய்யாமல் நல்வினையே செய்யினும் அதற்குரிய இன்பப் பயன் துய்க்க பிறவி மீண்டும் கூடும் எனப் புலப்படுகிறதே, ஆகையால் நல்வினையும் செய்யாதொழிதல் வேண்டுமோ? அது எப்படி?

அறிவு:--- பயன் விரும்பி நல்வினை புரியாமல், நிஷ்காமியமாக இறைவன் அருள்வழி நின்று செய்யும் அன்புடைய நல்வினைகள் வரும் பிறவிக்கு வித்தாகாமல் இறைவனருளில் லயமாகும் அஃதின்றி பயன் கருதிச் செய்யும் நல்வினை பொன்விலங்கு பூண்டதொக்கும்.

மனம்:--- இருவினை ஒப்பின் பிறகு ஆவது என்ன? விரைந்து சுருக்கமாய்க் கூறுக.

அறிவு:--- இருவினை ஒப்பினல் மலபரிபாகம் வரும்; மலபரிபாகமாவது மலத்தினது சத்தி தேய்தல் அதாவது யான் கருத்தாஎன்றும், பொருள்கள் என்னதென்றும், உணர்கின்ற மயக்க வுணர்வு குன்றி, யான் சிவனடிமையென்றும், எனதெனப் படும் பொருள்கள் சிவனுடைமை என்றும் காண்டல்; மலபரிபாகம் உற்றதும் சத்திநிபாதம் நிகழும் சத்திநிபாதமாவது திருவருட் சத்தி பதிதலாம். பதிதல் என்பது விளங்கித் தோன்றுதல் அது மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என நான்கு வகைப் பட்டு, ஒன்றுக் கொன்று மேலாகும். இருளினீக்கமும் ஒளியின் விளக்கமும் போல இருவினை ஒப்பும், மலபரிபாகமும், சத்திநிபாதமும் உடனிகழ்ச்சியாய் நிகழ்வனவாம். முடிவில் சிவானுபவ இன்ப முதிர்ச்சியாம். இவற்றின் விரிவுகளை சைவசித்தாந்த நூல்களாகிய மெய் கண்ட சாத்திரம், இருபத் தெட்டு ஆகமங்கள் முதலியவற்றில் அருளுடைய ஆசான் உபகாரத்தால் அறியவேண்டும்.

மனம்:--- அறிவா இன்ப நிலையாகிய உச்சியை எய்துதற்கு இருவினை ஒப்பு முதற் படியாகும் என்று உணர்ந்து கொண்டேன். அதற்கு முயல்கின்றேன். நீயும் உடனிருந்து உதவுவாயாக. நாமிருவரும் ஒருங்கே நன்னெறியில் செல்ல ஞான சக்திதாராகிய செவ்வேள் திருவருளைச் சிந்திப்போமாக. அவனருளாகிய திருப்புகழமிர்தத்தையே உள்ளமெனும் வயிறு நிரம்பப் பருகுவோமாக,

சிவமயம்:

கடல் கடத்தல்

"அன்பே உருவாய ஆண்டவனது இன்னருளால் பகுத்தறிவுடைய மக்களாகப் பிறந்த நாம் முழு முதற்கடவுளது திருமலர்ப் பாதங்களைப் புணையாகக் கொண்டு பிறவிப் பெருங்கடலைக் கடந்து முத்தியாகிய அக் கரையை யடைய வேண்டும்" என்று பல பெரியோர்கள் வாயிலாகவும் அரிய நூல்கள் வாயிலாகவும் தெரிந்துள்ளோம் அதுவே இறைவனது குறிக்கோளும் ஆம். ஆகவே இத்துறையில் முருகப் பெருமானது திருவருள் முன்னிற்குமாக.

மெய்யன்பர்களே! பிறவிப் பெருங்கடலைக் கடத்தற்குத் துணையாகவுள்ள எல்லாம் வல்ல இறைவனது திருப்பாதங்கள் எத்தன்மைத்து? அவை எங்குள்ளன? அவற்றை எவ்வழியாகச் சென்றடைய வேண்டும்! என்பன போன்ற விஷயங்களைச் சிறிது நாம் அமைதியோடு சிந்திக்கவேண்டும்.

சாதாரணமாக நாம் ஓர் நதியின் அக் கரையை யடைய வேண்டுமாயின் என்ன செய்கிறோம்? நதியை யடைந்து சரியான துறையைக் கண்டு, நடந்தோ அல்லது படகில் ஏறி படகோட்டியால் கொண்டு செலுத்தப் பட்டோ மறுகரையை அடைகிறோம். ஆகவே இதில் நமக்குத் தெரியவேண்டுவன என்ன? உடல் நோயும் மனச்சோர்வும் உண்டாகாது நதியை யடையும் வழி. சரி நதியை யடைந்தாகிவிட்டது எந்தத் துறையிலிறங்கினால் ஆபத்தில்லாமலும் நதியோடு அடித்துக் கொண்டு போகப்படாமலும் அக்கரையை யடைய முடியும்? எவ்விடத்தில் தண்ணீர் கற்பாறைகளி னிடையே கடமுட என்று ஒலித்துக் கொண்டு கீழ் மேலாகப் புரண்டோடாமல் சாந்தமாகத் தவழ்ந்து செல்லுகின்றதோ எந்தத் துறையில் சாமார்த்தியமான படகோட்டி இருக்கின்றானோ அந்தத் துறையை யடைந்தால் சுலபமாக அக் கரையை யடையலாம். வழி துறை தெரியாதிறங்கிவிட்டால் இடருற் றுழலவேண்டும்.

அதேபோல், பிறவிப் பெருங் கடலைக் கடத்தற்குச் சதுர் மறைகள், சைவத் திரு முறைகள், பக்தி ரசம் பெருக்கெடுத்தோடும் திருவாசகம், நினைந்ததை யளிக்கும் திருப்புகழ் இன்னன போன்ற அருள் நூல்களைப் பின்பற்றி. அவைகள் கூட்டிச் செல்லும் வழியே செல்லவேண்டும். அதுவே வேதநெறி. அப்படிச் சென்றால் அவைகள் நம்மை எங்கு கொண்டுபோய் விடுகின்றன? பக்தி வலையில் படுவோனாகிய பரம்பொருள் அருவ உருவத் திருமேனி கொண்டெழுந் தருளி யிருக்கும் ஆலயங்களாகிய நல்ல துறைகளில் நம்மைச் சேர்ப்பிக்கின்றன. அவற்றைச் சைவத் துறைகள் என்று ஆன்றோர் கூறுவர்.

நல்ல துறைகளில் நீரானது தனது மட்டத்திற்குமேல் திவலைகளைத் தெறித்துக் கொண்டும் பார்ப்பதற்குப் பயங்கரமாகவும் கற்பாரைக ளிடையே கீழும் மேலுமாகப் புரண்டோடாமல், "உலகமக்கள் புத்தியிலும், ஆற்றலிலும் தன்னைப்போலிருக்கவேண்டும்" என்பதைத் தெரிவிப்பதுபோல் சாந்தமாகத் தவழ்ந்து செல்லுகிறது. அவ்விடத்தில் அமைதி நிலவுகிறது. அமைதியே அன்பூற்றுக் கடிப்படையாம்.

அதுபோல வேதநெறியிற் சென்று சைவத் துறைகளாம் திருக்கோயில்களை யடைந்தால், ஐம்புலன்களின் வழிப்படும் தொழில்களனைத்தும், நிச்செயல்களை வெளிப்படுத்தி, ஆணவம், கன்மம், மாயையாதி பாறைகளில் மோதுண்டு கணந்தோறும் மாறி, மாறி நடவாமலும், சிவனடியார்களால் வெறுக்கப் படும் தன்மைத் தாய் இல்லாமலும் இறைவனது திருவருள் வழியே நின்று அவனதாணைக் கேற்பத் தொழில்கள் புரிகின்றன. அங்கு சிவமணம் கமழ்கின்றது. அதுவே முத்திக்கு முதற் படியாம். அங்கு நம்மைப் பிறவிக்கடல் கடத்த எல்லாம் வல்ல ஆண்டவன் அன்போடு உருவாருவமாய் வீற்றிருக்கின்றார். அவரது இணை மலர்ப் பாதங்களே நமக்குப் பெருந்துணை. கடல் கடக்குந் தோணி. மாயப்பிறப்பறுக்கும் மருந்து. மனத்திற்கு சாந்தி யளிக்கும் விருந்து.

மேற் கூறிய வண்ணம் சைவத்துறையி லிறங்கி செம்மலர்ச் சேவடிகளைத் தோணியாகக் கொண்டோர் வீடடைந்த தற்கும் மற்றோர் இடருற்ற தற்கும் சான்றுகள் உளவோ வெனின் உள.

(தொடரும்)